# தமிழீழ அரசியல்துறை
POLITICAL WING OF TAMILEELAM

https://thamileelaarasiyalthurai.info
tat.info.international@gmail.com
+(44) 0734 983 8393


நிர்வாகம்
தமிழீழ அரசியல் துறை
அனைத்து நாடுகள்
28-04-2026

TAT20260428-16T

## தேனிசைப்பாணர் செல்லப்பா அவர்களுக்கு “மாமனிதர்” என மதிப்பளிப்பு!

தமிழீழ விடுதலைப் போராட்டப் பாடல்கள் மற்றும் உணர்ச்சி பூர்வமான புரட்சிப் பாடல்களை, தன்னுடைய “கணீர்” என்ற கம்பீரக்குரலால் பாடி, தமிழர்களின் நெஞ்சங்களிலெல்லாம் விடுதலைத்தீயை ஓங்கி எரியச் செய்த “பாசறைப்பாணர்” தேனிசை செல்லப்பா என்ற விடுதலை நெருப்பு ஒன்று இயற்கையின் கோரப் பசியால் இன்று அணைந்து போனது.
தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டம் தென்காசிக்கு அருகிலுள்ள சிங்கிலிப்பட்டி என்ற கிராமத்தில், 1941 ஏப்ரல் 21 இல் பிறந்த இவர் தனது 85 வது அகவையில் இன்று ( 28.04.2026 ) இயற்கையெய்தினார் என்ற செய்தி கேட்டு, உலகத்தமிழினமே இன்று ஆறாத்துயரில் மூழ்கிக் கிடக்கின்றது. ஆரம்ப காலங்களில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான பாடல்களைப் பாட யாரும் துணியாத நிலையில், துணிந்து தமிழ் நாட்டில் பல மேடைகளில் பாட்டுக் கச்சேரிகளை நடாத்தி, தமிழீழ மக்களின் இன்னல்களையும் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தையும் பாடல்களாக பாடி, தமிழீழ மக்களுக்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் பேராதரவு திரட்டினார்.

“தேனிசை செல்லப்பா” அவர்களின் கம்பீரக்குரலினாலும், உறுதியான தமிழீழவிடுதலைக்கான ஆதரவு நிலைப்பாட்டினாலும்,கவரப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளும், தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களும், அவரை 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழீழத்திற்கு அழைத்தனர். யாழ்கோட்டை  முன் உள்ள முற்றவெளி மைதானத்தில் பல இலட்சக் கணக்கான மக்கள் முன்னிலையில் அவரது குழுவினரின் இசைக் கச்சேரி மிகச் சிறப்பாக நடைபெற்றது, அதனைத் தொடர்ந்து தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அவரது இசைக் கச்சேரிகள் நடைபெற்றன. இறுதியில் தமிழீழத் தேசியத் தலைவரையும், தளபதிகள் மற்றும் போராளிகளையும் நேரில் சந்தித்துப்பேசிய பின்னரே தமிழகம் திரும்பினார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஆதரித்து, உதவிய காரணத்தால் இவரும், இவரது குடும்பமும் பல நெருக்கடிகளை சந்தித்து, தமிழ் நாட்டில் இவர் வீட்டுக் காவலிலும் வைக்கப்பட்டார். இறுதிவரை தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், மாவீரர்களையும், தமிழீழத் தேசியத் தலைவரையும் மட்டுமே, புகழ்ந்து போற்றிப் பாடுவேன் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவும்,உண்மை யாகவும் இருந்த இவரை, பலர் சினிமாப் பாடல்களில் பாடவைக்க அழைத்தனர்.அவர் அவ்வாறு வந்த சினிமா வாய்ப்புகள் அனைத்தையும் மறுத்து விட்டார். தமிழீழத் தேசியத் தலைவர் மீது அளவு கடந்த பேரன்பும் மரியாதையும் கொண்டிருந்த “தேனிசை செல்லப்பா” அவர்கள் தன் வாழ்நாளின் இறுதி வரை தமிழீழத்திற்கான “விடுதலைப்போரிசைமுரசை” உலகெங்கும் வாழும் தமிழர்களின் செவிகளில் எல்லாம் தன்னுடைய கம்பீரக் குரலினால் ஓங்கி ஒலிக்கச் செய்து கொண்டேயிருந்தார் .

இவரது இழப்பால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் போராளிகளின் துயரில்  தமிழீழ அரசியல் துறையினராகிய நாமும் பங்கு கொள்வதோடு, இவர் தமிழ் மக்களுக்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் ஆற்றிய மகத்தான பங்களிப்பை கௌரவப்படுத்தும் முகமாக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் வழிகாட்டுதலைப் பின்பற்றி “பாசறைப்பாணர் தேனிசை செல்லப்பா” அவர்களுக்கு தமிழீழத்தின் அதி உயர் விருதான “மாமனிதர்” என்ற விருதினை வழங்குவதில் தமிழீழ அரசியல்துறையினராகிய நாம் பெருமை அடைகின்றோம்.
தமிழீழ விடுதலை என்ற சத்திய இலட்சியத்திற்காக களமாடிய மாவீரர்கள், போராளிகள்,மற்றும் மக்களின் செவிகளிலெல்லாம் என்றும் தணியாத விடுதலைப்பரணியை பாடிக் கொண்டேயிருந்த “மாமனிதர் செல்லப்பா” அவர்கள் எம்மை விட்டு எங்கும் சென்று விடவில்லை, அவர் தான் இசைத்த “விடுதலைக்கானங்கள்” ஊடாக எமது செவிகளில் புகுந்து எமது மக்களின் தமிழீழ விடுதலைக்கான  இலட்சிய பயணத்தை என்றும் வீச்சாக்கிக் கொண்டேயிருப்பார்.

**“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”**

| | |
|---|---|
| திரு. கி. நல்லையா | திரு. இ. இளங்கீரன் |
| நிர்வாகப் பொறுப்பாளர் | பொறுப்பாளர் |
| தமிழீழ அரசியல்துறை | தமிழீழ அரசியல்துறை |
| அனைத்து நாடுகள். | அனைத்து நாடுகள். |




தமிழீழ அரசியல்துறை – அனைத்து நாடுகள்

தமிழீழ அரசியல்துறை - ஐக்கிய இராச்சியம்
தமிழீழ அரசியல்துறை - கனடா
தமிழீழ அரசியல்துறை - சுவிச்சர்லாந்து
தமிழீழ அரசியல்துறை - பிரான்சு
தமிழீழ அரசியல்துறை - அவுஸ்திரேலியா
தமிழீழ அரசியல்துறை - யேர்மனி
தமிழீழ அரசியல்துறை - நியூசிலாந்து
தமிழீழ அரசியல்துறை - அமெரிக்கா
தமிழீழ அரசியல்துறை - ஸ்கொட்லாந்து
தமிழீழ அரசியல்துறை - நோர்வே
தமிழீழ அரசியல்துறை - டென்மார்க்
தமிழீழ அரசியல்துறை - பின்லாந்து